

மேத்தா
காமிக்ஸ்
பயங்கரத்
தீவு
பதிப்பாசிரியர்:
முல்லை தங்கராசன்
ரூ
1-50

# THE PIONEER MATCH WORKS,

(A UNIT OF ASIA MATCH CO. PVT. LTD)

BOOPATHY BUILDINGS,

**SIVAKASI – 626123.**




MANUFACTURERS AND EXPORTERS OF
VERY POPULAR '**CHAVI**' BRAND
SAFETY MATCHES

Grams: PIONEER. Phones: 916 to 919. Telex: 0448–207 ASIA.


பயங்கரத் தீவு
பிரான்ஸின் விண்வெளி ஆராய்ச்சிக்கூடம். திட்டமிட்ட முன்னேற்பாட்டுடன் திடீரென வந்திறங்கி தன் மூர்க்கத் தனமான தாக்குதலைத் தொடுத்தது முகமூடிக் கும்பல் ஒன்று. தனி மனிதன் ஒருவனின் பேராசையின் விளைவே இந்தப் படையெடுப்பு...

# அத்தியாயம் 1. தீவு சாம்ராஜ்யம்







ஒரு மணி நேரத்திற்குப்பின் பாரிஸில்...
தாக்குதலின் அடிப்படை நோக்கம் என்ன சார்? கடந்த ஆறு மாத காலத்தில் இது மூன்றாவது சம்பவம்!
விரைவில் அதனைக் கண்டுபிடிப்போம். இந்த நாசச் செயல்களுக்கு முடிவுகட்டும் முழுப்பொறுப்பும் நமக்குத் தரப்பட்டுள்ளது.


இம்முறை அதிர்ஷ்டம் நம் பக்கம் உள்ளது. அடுத்த தாக்குதல் பற்றி முன்னதாக தகவல் கிடைத்திருக்கிறது. நான்உத்தரவிட்டபடி உஷார் நடவடிக்கையினை மேற்கொண்டாயா?
ஆம், சார் நமது ஏஜண்டுகள் எல்லா விமான, புகைவண்டி நிலையங்களிலும் நிறுத்தப்பட்டுள்ளனர்.


உளவு நிறுவனம் 'Q'வின் பாரிஸ் தலைமையகத்தில் தடுப்பு நடவடிக்கை பற்றி தொடர்ந்து விவாதிக்கப்பட்டது...
... அத்துடன் வேவு விமானங்கள் பல கடலோரங்களைக் கண்காணித்து வருகின்றன!
எல்லா நடவடிக்கைகளையும் செய்தாகி விட்டது. இனி பொறுத்திருந்து பார்ப்போம்.


சரியாக இரண்டு மணி நேரத்திற்குப்பின், உளவு நிறுவனத்தின் பிரத்யேக விமானம் ஒன்றிலிருந்து...
...கீழே கனத்த பனிமூட்டம்! உறுதியாகச் சொல்லமுடியவில்லை..... ஆனாலும் கீழே கடலில்... ஏதோ மிகப் பெரிதாக ஒன்று செல்வதாக நினைக்கிறேன்!


ரேடியோச் செய்தியை அனுப்பியவன் 'Q' உளவு நிறுவன ஏஜண்ட் பாப் மிட்செல்...
...நான் இன்னும் சற்றுத் தாழப் பறந்து கண்காணிக் கிறேன்...!
பனி மூட்டம் சற்றே விலக...
ஓ... நீர்மூழ்கிக் கப்பல்...!
மேலே பறப்பது யாராயி ருந்தாலும் சரி... விட்டு வைப்பது ஆபத்து!


திடீரென நீர்மூழ்கியின்
தளத்திலிருந்து புகையைக்
கக்கியவாறு சீறிக்கிளம்பி
யது ஏவுகணை ஒன்று...
எ-என்ன இது...?
ஏவுகணை!
முட்டாளே! இலக்கு
நோக்கிச் சுடும்
அந்த கருவியினை
இயக்கத்தெரியாதா
உனக்கு?


சற்றே குறிதவறினாலும் கூட, ஏவுகணை போதுமான
சேதத்தை உண்டாக்கி விட்டது...
விரைவில் கீழே
விழுந்துவிடும்
விமானம்!
எதிரிலிருககும் இந்தக் குன்று
களைக் கடந்துவிட்டால் உயிர்
தப்பும் வாய்ப்பிருக்கிறது
எனக்கு...


பெரும் சேதமுற்ற அந்த வேவு விமானம் குன்றுகளைக் கடந்து தரையில் வந்து மோதியது...


...வேகம் கட்டுப்பட்டு ஒரு நிலைக்கு வந்தது. மிட்செல் உள்ளிருந்து வெளியே தாவினான்...
எட்டச் சென்றாக வேண்டும்... விமானம் வெடித்துச் சிதறப் போகிறது.


எரியும் விமானத்திலிருந்து ஐம்பது கஜதூரத்தில் நின்றுகொண்டிருந்த போது குதிரைக் குளம்பொலிச் சத்தம் கேட்டது ..
அதிர்ஷ்டக்காரன் தான் நான். யாரோ விமானம் விழுவதைக் கவனித்திருக்கின்றனர்!
ஆனால் அவர்கள் நெருங்கி வந்தபோது...
இருக்க முடியாது... இது எப்படி சாத்தியம்?
அமெரிக்க குதிரைப் படையினர் இங்கு எப்படி வந்தனர்... புரியவில்லையே...


அதே சமயம் பின்னால் குன்றுகளில் லேசான சத்தம் கேட்டுத் திரும்பினான்...
செவ்விந்தியன்...!
நிம்மதியடைந்தான் மிட்செல்...
புரிந்தது... இங்கு ஏதோ படப்பிடிப்பு நடைபெறுகிறது! வீணாய் குழம்பி விட்டேன் நான்...!


ஆனால் அவனது நிம்மதி நீடிக்கவில்லை... இடது தோளில் பாய்ந்தது அம்பு...
ஆஆஆ!


குன்றிலிருந்து தலைகுப்புறப் பாய்ந்தான்
நம் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்தவனை முதலில் அம்பு எய்துவிட்டான், காப்டன்!


தனது விமானியுடன் ரேடியோத் தொடர்பு கிடைக்காத 'Q' நிறுவனத்தின் பாரீஸ் தலைமையகம் விபரீதம் என்பதை உணர்ந்தது...
மிட்செல் தரை இறக்கப்பட்டிருக்க வேண்டும், ஸார். எது நடந்திருப்பினும் மார்ஸீலிஸிலிருந்து தென்கிழக்காக நூறு மைல் தொலைவுக்குள் தான் நிகழ்ந்திருக்க வேண்டுமெனக் கணிக்கின்றனர் நமது ராடார் நிபுணர்கள்


அப்படியானால் அமெரிக்கக் கோடீஸ்வரர் ஜோஸுவாவின் தீவுக்கருகாமையில் தான் மிட்செல் இறங்கியிருக்க வேண்டும்!
அப்படியானால் பிரச்சனை தான்... ஜோஸுவா அந்தத்தீவில் தனக்கென ஒரு ராஜ்யத்தையே உருவாக்கியுள்ளார். அங்கே வேற்று மனிதர்கள் யாரும் கால்வைக்க முடியாது!


தலைவரிடமிருந்து பெருமூச்சு வெளிப்பட்டது.
மேலிடத்திலிருந்தும் சற்றுமுன் அதைத்தான் கூறினார்கள்! எந்த ஒரு நாடும் அந்த தீவில் சோதனையை மேற்கொண்டு அவரது கோபத்திற்கு ஆளாக விரும்புவதில்லை. ஏன் நமது மேலிடமேகூட அவரது விஷயத்தில் தலையிடப் பயப்படுகிறது!
காரணம் இருக்கிறது ஸார்! அந்த மனிதன் கோடிகோடியாய்ச் சேர்த்து வைத்திருக்கும் பெரும் செல்வந்தன்...!
மேலை நாடுகளில் தான் வைத்திருக்கும் பொருளாதாரத் தொடர்பினை துண்டிக்க ஜோஸுவா தீர்மானித்தாரானால்...
...விளைவு பெரும் சிக்கலைத் தோற்றுவிக்கும்! பொருளாதாரச் சீர்குலைவு உண்டாகும்! அது சரி, அவர் எப்படிப்பட்டவர்?
அவர் ஒரு தேர்ந்த தொழிலதிபர் எனக்கூறமுடியாது ஆனால் தொழில்துறை நிபுணர்களை நியமித்து தன் வாணிபத்தை வெற்றிகரமாக நடத்திவரும் அதிபுத்திசாலி...


அவர் ஆரம்பத்தில் அமெரிக்காவில் ஒரு சாதாரண மலை
வாழ் மனிதர். அறுபது வருடங்களுக்குமுன் தான் கண்டெ
டுத்த ஒரு பெரும் தங்கப்புதையலுடன் சான்பிரான்சிஸ்கோ
வந்து சேர்ந்தார். அப்போது அவர் ஒரு லட்சாதிபதிதான்.
இப்போது அதைப்போல் மூன்று அல்லது நான்கு மடங்கு
பெரும் பணக்காரர், இது தவிர்த்து யாருக்கும் வேறு
எந்தவிதத் தகவலும் தெரியாது!


அவரைப்பற்றி அதிகப்படி
யாக நாம் அறிய வைத்தி
ருக்கும் ஒரே ஒரு விஷயம்
இதுதான்... அவரது வரவு
செலவினைத் தற்போது
கவனித்துவரும் ஹென்றி
லீவர் என்பவன் உண்மை
ஊழியனாகத் தெரியவில்லை
அவரது சொத்துக்கள்
பலவற்றை விற்றுப்
பணமாக்குகிறான்...
ஆனால் எல்லோரையும்
தன் கட்டுப்பாட்டில்
வைத்திருக்கும் ஆற்றல்
ஜோஸுவாவிடம்
இன்னும் உள்ளது...


கனவான்களே, நம்முடைய நடவடிக்கைபற்றி பேசுவோம். யாராவது ஒருவர் அந்த தீவிற்குச் சென்று நடந்ததைக் கண்டறிய வேண்டும். ஆனால் செல்பவர் மூலம் நமது இலாகாவை அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளக் கூடாது.
ஜான் இந்தப் பணிக்கு மிகமிகப் பொருத்தமான நபர்.


அன்று மாலை, ஜான் தன் இருப்பிடம் திரும்பி அறைக்குள் நுழைந்தபோது ..
நீங்களா! என்ன விஷயமாய் வந்தீர்கள்?
ஒப்பற்ற உன் உதவி தேவை ஜான். நமது 'Q' நிறுவனத்தின் உளவாளி ஒருவர் பிரெஞ்சுதேச கடற்கரைக்கு அப்பால் உள்ள ஒரு தீவில் விமான விபத்திற்காளாகி விட்டார் என்று சந்தேகிக்கிறோம்.


அந்தத் தீவிலோ அத்துமீறி யாரும் உள்ளே பிரவேசிக்க முடியாது!
நீதான் அந்த உளவாளியைப் பத்திரமாக மீட்டுக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். இந்த வேண்டுகோளை நீ மறுக்கு முன்னால் ஒரே ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்.
எல்லோருமே உன்னைத் தவறாகக் கருதிய நேரத்தில் பாப்மிட்சல்தான் தன் வேலையைப் பணயம் வைதது உனக்கு உதவ முயன்றவன் அவன்தான். இன்று தீவில் பெரும் ஆபத்தில் சிக்கியுள்ளான்... மறுக்கப் போகிறாயா?
'இல்லை'யெனத் தலையசைத்தான ஜான்...
நீ மறுக்கமாட்டாய் என்பது தெரியும். அருகாமையிலுள்ள விமான நிலையத்தில் அனைத்துஏற்பாடுகளும தயாராய் உள்ளன. உன்னை அங்கே காரில் கொண்டு சேர்க்கிறேன் வா!


சாகஸ வீரன் ஜானின் மற்றுமொரு தீரப் பயணம் துவங்கியது ..
ஜோஸுவாவின் தீவிற்கும் விண்வெளி ஆய்வுக்கூட கொள்ளைச் சம்பவத்திற்கும் தொடர்பிருக்கலாம் என ஜானிடம் கூறினீர்களா? மேலும் மிட்செல் மரணமுற்றிருக்கவும் வாய்ப்புண்டு என்பதையும்...
ஊஹூம்... கூறவில்லை! மிட்செல்லை காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத் தான் இந்தப்பணியை ஏற்றுள்ளான்!
மற்றதைப் பொறுத்தமட்டில்... தீவில் சந்தேகப்படும்படியாக ஏதேனும் தெரியவருமானால் ஆராய்ந்து அறியாமல் திரும்பமாட்டான். அநீதியை எதிர்ப்பதும் ஆபத்தை எதிர்கொள்வதுமே அவனது இயல்பு. அக்குணங்களால்தான் ஒரு சிறந்த உளவாளியாகத் திகழ்கிறான் ஜான்...

# அத்தியாயம் 2. யார் நீ?


விடிவதற்கு முன்னால் அந்த சிறு ரக விமானம் ஜோஸுவாவின் பிரத்யேகத் தீவினை 5000 அடி உயரத்தில் கடந்து கொண்டிருந்தது.
ஆபத்தான, பிடிப்பற்ற குதிப்புமுறை பாராசூட் மூலம் குதித்துவிட்டான் ஜான்... அப்பப்பா எனன தைரியம்!
இந்த ஆபத்தான முயற்சி தவிர்த்து வேறு வழியில்லை. வழக்கமான முறையில் குதித்தால் தரை இறங்கத் தாமதமாகும். தீவிலுள்ளோரின் பார்வையில்படும் வாய்ப்பு அதிகம்.


மேலும் தாமதப்படுத்தினால் பேராபத்தாகக் கூடிய அந்தக் கடைசி விநாடியில் பாராசூட்டின குடையை விரிக்கச் செய்து மெதுவாய்த் தரையிறங்கினான் ஜான்.
பிரச்னையின்றி இறங்கியாகிவிட்டது. யாராவது கழுகுக்கண் பார்வை கொண்டிருந்தால்தான் என் வருகையைப் பார்த்திருக்க முடியும்!


பாராசூட் குடையை மடித்துக்கொண்டிருந்த ஜான் முரட்டுக்குரல் ஒன்று கேட்டு திடுக்கிட்டான்
உயிரின்மேல் ஆசையிருந்தால் அசையாது நில் அங்கே!
இது என்ன விந்தை? மத்தியதரைத் தீவு ஒன்றிலல்லவா தரையிறங்கியிருப்பதாக எண்ணினேன. சென்ற நூற்ருண்டின் டெக்ஸாஸ மாகாணம் போலல்லவா தோன்றுகிறது!
ஊடுருவல்காரனைப் பிடித்து விட்டோம். நீ கருவியில் வழக்கமான கண்காணிப்பைத் தொடரலாம்!
கணகாணிப்பா? ராடார் மூலம் என வருகையைக கவனித்து விட்டனர்!


காலாட்படை அதிகாரியின் சீருடையிலிருந்த அம்மனிதன் முன்னோக்கி வந்தான்...
சொல்... யார் நீ... இந்தத் தீவில் உனக்கென்ன வேலை?
இவன் யாராயிருப்பினும் பாப் மிட்செலைப்பற்றி வாயைத் திறக்கக்கூடாது. இந்தத் தீவில் அவன் இருப்பதே இவர்கள் அறியாத செய்தி யாயிருக்கக் கூடும்!


ஜான் தயங்குவதைக் கண்ட அம்மனிதன்...
நீ லேசில் பதில் சொல்ல மாட்டாய். உன்னைப்போன்ற ஆட்களைப் பேச வைக்கும் வழிமுறைகள் என் ஆட்களுக்குத் தெரியும்...


இரண்டு வளைவு மரங்களிடையே அழைத்து வரப்பட்டான் ஜான். கட்டித் தொங்கவிடப்பட்ட பெருங்கற்களின் கனத்தில் மரங்கள் இரண்டும் தலைகுனிந்து நின்றன...
திரும்பவும் கேட்கிறேன் - எதற்காக இங்கே வந்தாய்?
பதிலே கூறக் கூடாது. சும்மா வேணும் பயமுறுத்திப் பார்க்கிறார்கள்!


ஆனால் அது வீண் மிரட்டலாயிருக்கவில்லை...
ஆ ஆ ஆ!
இனிமைதரும் அனுபவமாயில்லையோ? இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறோம்... இதற்கே கூச்சலிடுகிறாயே?



தலைவன் உத்தரவிட மேற்கொண்டு இரண்டு கற்களை துண்டித்து விழவைத்தனர்... தாங்காத உடலவலியிடையே எதிரியின் ரேடியோவில் ஏதோ செய்தி வருவதை உணர்ந்தான் ஜான்...
இனி அவன் பேசுவதைத் தவிர்த்து வேறு வழியில்லை காப்டன்!
ஹலோ! மூர்கான் ஸ்லேட் பேசுகிறேன். என்ன பிரச்சனை?




ரேடியோத்தகவல் கோபத்தை உண்டாக்கியது ஸ்லேடிடம்...
காப்டன், நினைவிழந்து விட்டான் அவன்!
கிடக்கட்டும் அவன்... இப்போது அதைவிட முக்கியமான வேலை ஒன்று! கிழவன் குதிரை வண்டியை எடுத்துக்கொண்டு சொல்லாமல் கொள்ளாமல் வெளியே கிளம்பிவிட்டானாம். தெரியக்கூடாத விஷயங்கள் எதுவும் அவன் கண்ணில் படுமுன்னர் அவனை மடக்கியாக வேண்டும்!




இரண்டு பேர் கயிறினைத் துண்டித்து ஜானைத தரையிறக்கினர். விரைவிலேயே புரிந்தது தாங்கள் நினைத்ததுபோல் அவன் சுயநினைவற்றிருக்கவில்லை என்று...




துபபாக்கி கொண்டு குறி பார்க்க முயன்ற இரண்டாவது காவலனை தன் விரைவு ஆற்றலால் தோல்வியுறச் செயதான்...
ஆஆஆ!
விர்ர்ர்ர்ர்


எதிர்க்கத் துணியாத காவலன் உதவியினை நாடினான்...
காப்டன்! கைதி தப்பிவிட்டான்!
ரேடியோத் தொடர்பு கொண்டு மற்றவர்களை உஷார்ப்படுத்தி விட்டானே!


சடாரென அருகேயிருந்த குன்றினை நோக்கித் தாவினான் ஜான். உயிர் தப்பவேண்டுமானால் மறைவிடம் நாட வேண்டும்- அதுவும் விரைந்து...
மிட்செல்லிற்கு நேர்ந்த கதியைக் கண்டறிய இந்தக் கொலைக்கும்பலின் பார்வையிலிருந்து எப்படியும் நான் தப்பியாக வேண்டும்!


ஒரு குன்றின் பாதி உயரத்தில் ஏறிக்கொண்டிருந்த வேளையில் குதிரைகளின் குளம்பொலிச் சத்தம் கேட்டது....
அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த வேறு எவனோ வருகிறான்!
ஆபத்தான உயரத்தில நிற்கும் இவன் யார்...?


தொடர்ந்து ஜான் மேலே செல்ல முயன்ற வேளையில் சிறு கற்கள் இடம்பெயர்ந்து சரிவின்கீழ்நோக்கி வந்தன. கிழவனிடமிருந்து கூக்குரல் வெளிப்பட்டது...
கற்கள அவரைத் தாக்கி விட்டன!
ஆ ஆ ஆ....வ்!


கிழவன் கைநழுவவிட்ட கடிவாளத்தை திரும்பப்பற்ற முயலுமுன் வண்டி பாறையில் வந்து சடாரென மோதியது...
குதிரைகள் விடுபட்டு கிளம்பிவிட்டன... கிழவன் பள்ளத்தில வண்டியோடு பாயப் போகிறான்...!


இமைப்பொழுது நேரத்தில் சக்கரங்கள் இரண்டும் பாறையின் விளிம்பில் கீழ்நோக்கி நழுவின... என்ன ஆச்சரியம்! வண்டி அந்த நிலையிலேயே நின்றுவிட்டது...
கொஞ்சமும் அசைய வேண்டாம்.. வண்டி கவிழ்ந்து விடும்.


ஜான் விரைந்து பாறையின் விளிம்பில் இறங்கி வண்டியின் முன் பகுதிக்கு வந்தான்..
நான் இந்தப் பாறையின் பிடிப்பில் கால்களை வைத்துக் கொண்டு வண்டியின் அச்சினை உறுதியாகப் பிடித்துக் கொள்கிறேன்!
முட்டாள் இளைஞனே! நீயும் வீணாய் உயிரை விடத் தீர்மானித்து விட்டாயா?


வண்டியின் முழு எடையையும் தாங்கிக்கொண்டேன். மெதுவாக வெளியேறுங்கள்!
ஓகே, இளைஞனே!


கிழவன் பாதுகாப்பான இடம் சேர்ந்ததும், ஜான் பிடிப்பினை விலக்க வண்டி பள்ளம் நோக்கிப் பாய்ந்தது...
என உயிரைக் காப்பாற்றிய உனக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன் மகனே.


என் பெயர் ஜோஸுவா... தீவு எனப்படும் இந்தத்துண்டு நிலப்பகுதிக்கு உரிமையாளன நீ யார், மகனே?
சடாரென மனதில தோன்றிய பொய் ஒன்றை அவிழ்த்து விட்டான்...
நான் ஒரு பத்திரிக்கையாளன மிஸ்டர் ஜோஸுவா. உங்கள் தீவைப்பற்றி கேள்விப்பட்டு..
ஓ... இவர்தான் அந்த அமெரிக்கக கோடீஸவரரா!? வயதான மனிதர் என்று கேள்விப்படடது சரிதான்!
...ருசிகரமான தகவல் திரட்ட வந்தாயாக்கும்?! பொதுவாக, நான அத்துமீறி நுழைபவர்களை கடலில் தூக்கி வீசச் செய்து விடுவேன். ஆனால் உனக்கு மட்டும் விதிவிலக்கு.
மூர்கான் ஸ்லேட் தன பட்டாளததுடன் வந்து சேர்ந்தான்...
அவனை எங்களிடம் ஒப்படையுங்கள் ஸார்... நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்!
வேண்டாம்... இந்த இளைஞன என் உயிரைக் காப்பாற்றியதால் சில தினங்கள் இங்கே தங்கிச் செல்ல அனுமதித்திருக்கிறேன். இரண்டு குதிரைகளைக் கொடு, எல்லோரும் கிளம்புவோம்!


பததுநிமிட பயணத்திற்குப பின, உயர்நத மாடமாய் அமைநத பெருங்குன்றின்கீழ் பிரம்மாண்டமாய்காட்சி தந்த பண்ணைவீடு ஒன்றினை வந்தடைநதனர்...
அதுவே என சிறு குடில, மகனே. இங்கே கால வைக்கும் முதல் வேற்று மனிதன் நீதான்!
இந்த கிழவருககு வெளி உலகத்தாரைக் கண்டால வெறுப்பு எனத் தெரிகிறது. ஆனால்இந்தஸ்லேட் அவனது கூட்டத்தைப் பற்றித்தான் சந்தேகப்பட வேண்டியிருககிறது.
முற்றத்தில் வந்திறங்கியதும் ஜோஸுவா தன் காவல் படையினரை அனுப்பி வைத்தார்.
உள்ளே வா, இளைஞனே சுற்றிக் காண்பிக்கிறேன்.
ஸ்லேட் ஒரு கொலைகாரன்! தனித்து அவனிடம் சிககியிருந்தால் என் உயிரைப் பறித்திருப்பான்...
வீவரிடம் நடந்தவற்றைக் கூறியாக வேண்டும்!


ஜோஸுவாவின் பணப் பொறுப்புகளைக் கவனித்து வரும் ஹென்றி
வீவர் தீவுவாசிகள் அனைவரிடமிருந்தும் மாறுபட்டவன்...
அந்த அத்துமீறல் காரனை விசாரித் தறியும் வாய்ப்புக கிடைக்கவில்லை ஏதேனும் ஒரு விபத்தினை உரு வாக்கி அவனைத் தீர்த்துக்கட்டவா?
வேண்டாம்! கிழவனின் மனதில் சந்தேகம் தோன்றினால் ஆபத்து.
மேற்கொண்டு பணம்பெற நான் தயாரிக்கும் தஸ்தாவேஜுகள் சிலவற்றில் அவனது கையெழுத்துத்தேவை. கிழவன் லேசுப்பட்ட ஆளில்லை... நமது நடவடிக்கைகள் பற்றி சிறு சந்தேகம் தோன்றினாலும் எதிலும் கையெழுத்திட மாட்டான்...
அது சரி... வந்திருக்கும் பொடியனை என்ன செய்வது?


தொடர்ந்து அவனைக் கண்காணித்துக் கொண்டிரு. நம் சம்பந்தப்பட்ட எதுவும் அவன் கண்ணில்படக்கூடாது. கிழவனை எப்படியும் சரிக்கட்டி அவனைத் தீவைவிட்டு விரைவில் வெளியேற்றி விடுகிறேன்.
ஓகே! வெளியேறும் அவனது உடலில் குண்டு துளைக்கச் செய்வோம். ஆனால் ஒரே ஒரு விஷயம் தான் சற்றுக் கவலை தருகிறது!
கிழவனை குஷிப்படுத்துவதற்காக அடுக்கடுக்கான பொய்களைச் சொல்லி சமாளிப்பதில் மிகவும் சிரமப்பட்டுள்ளோம். வந்திருப்பவனின் நோக்கம் பத்திரிக்கை சம்பந்தமில்லாமல் வேறு வகையாயிருந்தால்-நமக்கு பெரும் இடைஞ்சலைத் தோற்றுவிப்பான் வீவர்.
அதுபற்றி ஏற்கனவே நான் யோசித்துவிட்டேன். இதோ கிளம்பிச் சென்று அவர்களது உரையாடலில் கலந்துகொள்கிறேன்!


அங்கே பண்ணை வீட்டினுள் எதுவும் அறியாதவன்போல்
கதை கேட்கலானான் ஜான்...
தெரியுமா மகனே. ந்த பல
வருடங்களாக ஆராய்ச்சிக்காக
பல லட்சம் டாலர்கள் செலவழித்
துள்ளேன். ஒவ்வொரு துறையிலும்
தலைசிறந்தவர்களை அதற்கென
கொண்டுவந்துசேர்த்திருக்கிறேன்.
நீங்கள்
சொல்வதை
நம்புகிறேன்,
ஸார்.


வாலிப வயதில் நான் ஒரு
மகாமுரடன். யாரும் என்
னுடன் மோதிச் ஜெயித்த
தில்லை. ஆனால் இப்போ
தோ வயதான கிழவன்.
எதிலும் தலையிடாமல்
ஒதுங்கி வாழவேவிருப்பம்...


கிழவரின் கண்களில் லேசாய் துயர் படர்ந்தது...
நாகரீக காலத்திற்கு முந்திய மேலை தேசத்தினை நான் அறிந்தவன். அப்புறம் நாகரீக மோகம் தலைதூக்கியது. நாட்டை பாழ்படுத்திவிட்டது. சுதந்திரமாய் நடமாட முடியாதபடி அனைத்திலும் மாற்றம். எங்கு பார்த்தாலும் ஜனங்கள், கார்கள், நகரங்கள்...! அனைத்தையும் வெறுக்கிறேன் நான்!


வீவர் ஓசையின்றி நடந்து நெருங்கி வந்தான்...
அதற்காகத்தான் இத்தீவினை விலைக்கு வாங்கினேன். தீவிற்கேற்ற பழமை வாழ்வை மேற்கொள்ள ஒத்துக்கொண்டவர்களை பணிக்கு அமர்த்திக்கொண்டேன். உனக்குத் தெரியுமா-என் ஆட்களில் ஒரு பகுதி சுறுசுறுப்புமிக்க பழங்குடியனரான செவ்விந்தியர்கள். எனது மானேஜர் வீவர் என் எண்ணத்தை உணர்ந்து செயல்படக்கூடியவன்.


ஆனால் தீவில் எதுவும் மெய்
இல்லை மகனே பழமை என்று
நம்ப வைப்பதற்கான வெறும்
கண் துடைப்பு ஏற்பாடுகளே.
நான் விரும்பு உண்மையான
பழமை இல்லை இங்கே ஏன்
இந்தப் பூமிமுழுவதிலும்
எங்கும் இல்லவே இல்லை...
பூமியைத் தவிர்த்து
வேறெங்குமே
கிடையாதா மிஸ்டர்
ஜோஸுவா?


திடீரென கிழவரின் கண
களில் பிரகாசம் சுடர்விட்
டது...
நீ சொல்வது சரி
தான.இந்த பிரபஞ்சத்தில்
பல கிரகங்க்ள் உள்ளன.
அங்கு மனித இனமே
இருக்காது... நாம்
செல்லும்வரை
நம் வாலிப நண்பருக்கு
தெளிவாய் புரியவைத்
தால் நல்லது மிஸ்டர்
ஜோஸுவா...


முற்றத்தைக் கடந்து நீண்ட படிக்கட்டுகள் கொண்ட நிலவறை போன்ற கட்டிடம் ஒன்றிற்கு அவர்களை அழைத்து வந்தான் வீவர்...
புதிய உலகம் ஒன்று எங்கள் வருகைக் காக காத்திருக்கிறது, மகனே. உனக்கு அதில் நம்பிக்கை இல்லை என நினைக்கி றேன். இரண்டு வருடங்களுக்கு முன் நானும் அப்படித்தான் எண்ணினேன்- வீவர் இந்த யோசனையுடன் என்னை வந்து சந்திக்கும்வரை!
ஆயுதந்தாங்கிய காவலன் எஃகு கதவினைத் திறந்து அவர்களுக்கு வழிவிட்டான். தரைமட்டத்துக்குக் கீழே சரிவான நீண்ட பிரகாரம் எதிரே காட்சி தந்தது.
பெரும் பொருட்செல வின்றி இத்திட்டம் சாத்தியமில்லை, மிஸ்டர் ஜோஸுவா!
பணம்தான் என்னிடம் கொட் டிக்கிடக்கிறதே! வீவரும் விஞ்ஞானிகளும் பணம் தேவை எனக் கேட்கும்பொழு தெல்லாம் கேள்வி கேட்காது கையெழுத்திட்டுத்தருகிறேன்!


அங்கே வாழ்வில் மறக்க இயலாத காட்சி ஒன்றினைக் கண்டான் ஜான். கீழ்த தளத்தில் பிரம்மாண்டமான ராக்கட் ஒன்றின் அடிப்பகுதி இணைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.
இந்த நவீன உலகின் புதுமைத் தயாரிப்பான எந்திரம் எங்களை புதியதோர் உலகிற்கு அழைத்துச் செல்லப் போகும் கருவி இதுவே! இவை மனிதர்களை நிலவு வரை அழைத்துச் சென்றுள்ளது. நாங்கள் அதற்கும் அப்பால் செல்லப்போகிறோம் எத்தனை நாளில் இது பூர்த்தியாகும், வீவர்?
இன்னும் இரண்டே மாதங்கள் தான் ஸார்.


இங்கிருப்போர் அனைவரும் என்னைப்போல்தான் புது உலகம் காண துடித்துக கொண்டிருக்கின்றனர்.

# அத்தியாயம் 3. அழிவுப் பயமுறுத்தல்







நூறுவயதைத் தாண்டிய ஜோஸுவா இன்னும் வாழப்போவது குறிகியகாலம்தான் புதிய உலகைக் காணப்போகிறோம் என்ற எண்ணம் அவருக்கு ஒரு மகிழ்வைத் தருமல்லவா?
ஓஹோ... கடைசிக் காலத்தில் வாழ்வில் அவருக்கோர்பற்றுதலை உண்டாக்க விரும்புகிறீர்கள்...
கரெக்ட்! உன்னையும் அதனால் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். எதையாவது கூறி நாங்கள் உருவேற்றியிருக்கும் நம்பிக்கையினைத் தகர்த்திவிடாதே.
புரிந்து கொண்டேன்!
ஜானும் ஜோஸுவாவும் வெளியே புறப்பட்டனர்...
பிரச்னையை ஒருவாறு சமாளித்து விட்டேனென நினைக்கிறேன். கிழவனை மகிழ்விக்கவே இத்தனையும் செய்கிறோம் என அவன நம்பிவிட்டான்.
உண்மை புரியாதிருந்தால் சரிதான்.


அடுத்த இரண்டு மணி நேரப் பொழுதிலும் தன் நூறு ஆண்டு கால வாழ்க்கையில் சேகரித்த பொக்கிஷங்களை ஜானுக்கு காண்பித்து மகிழ்ந்தார் கிழவர்...
இந்தப் பொக்கிஷமும் தீவில் உருவாக்கியுள்ள மற்றவைகளும் உங்களுக்கு எனறென்றும் பெரும் புகழும் ஈட்டித் தரககூடியவை!
பழமைமிகு மேலை தேசம் பாழ்பட்டது போல் என் தீவு சீரழிய அனுமதிக்க மாட்டேன். வா, இந்த வழியாக...


இது வீவரும் அறியாத இடம். மேலே குகை ஒன்று உண்டு. உள்ளே வெடிப்பொருட்களை நிரப்பியிருக்கிறேன். விண்வெளிப்பயணப் மேற்கொள்ளும் நிலை வந்தவுடன் குறிபபிட்ட கால அவகாசத்தில் வெடிக்கச் செய்ய ஏற்பாடு செய்வேன்.


குண்டுகள்வெடித்தபின், வெளியார் வந்து என் தீவை பாழ்படுத்த இங்கு எதுவுமே மிஞ்சியிராது! வா, மிகவும் களைப்பாயிருக்கிறது போகலாம்!


உணவிற்குப்பின், விருந்தினர் அறையில் ஜானை விட்டுச் சென்றார் ஜோஸுவா...
நன்கு தூங்கு மகனே. நாங்கள் எங்கள் பயணத்தை துவக்கும்போது நீயும் ஒருவேளை எங்களுடன்வர விரும்பலாம். யோசித்து முடிவுக்கு வா.
கட்டாயம் யோசித்து பதில் கூறுகிறேன் சார்.


அவனது தீவு விஜயம் வேடிக்கையானதாகவும் நம்ப முடியாததாகவும் இருந்தது. பாப்மிட்செல்லைத் தேடும் முயற்சியில் ஜான் அதுவரை எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அவன் அதுபற்றி யோசித்துக் கொண்டிருந்த வேளையில்...
ஜன்னலுக்கு வெளியே காவலிருக்கிறான் ஒருவன். நான்வெளியே செல்வதை விரும்பாத யாரோ செய்த ஏற்பாடு இது நான் அறியாத விஷயங்கள் தீவில் ஏராளமாய் இருக்கக் கூடும்...
பாப்மிட்செல்லை எப்படியும் தேடிக் கண்டாக வேண்டும். அறையினுள் இருப்பதில் பயனில்லை. இந்தக் கைக்கோடாரிகளைப் பயன்படுததிக் கொள்வோம்.


பத்து நிமிட நேர வேலையில் தரைப்பலகைகள் இரண்டைப் பெயர்த்து உள்ளிறங்கினான்...
வீவர் நம்மிடம் நடப்பதனைத்தும் ஏமாற்றும் நாடகம் என்றான. ஆனால் வல்லுநர்கள் பலர் விண்கலத்தில் வேலை செய்வதைப் பார்த்தால் அவன சொல்வதை நம்பமுடியவில்லை.


கீழிறங்கி தளத்திற்கு வந்தான்...
முதலில் விண்கலத்தை சோதித்துப் பார்க்கவேண்டும் பாப் மிட்செல்லிற்கு என்ன நேர்ந்திருந்தாலும் நிச்சயம் இதனோடு கட்டாயம் தொடர்பிருக்க வேண்டும்!


அவன் முற்றத்தைக் கடந்து வந்ததை எவரும் கவனிக்கவில்லை. நிலவறைக் கட்டிடத்தின் நுழைவாயிலை நெருங்கிய வேளையில் பேச்சுக்குரல் கேட்டு சுவரோடு பதுங்கினான்...
வந்திருக்கும் புதியவனைப் பற்றி கவலை வேண்டாம் அவன் அறைக்கதவுக்கும் ஜன்னலுக்கும் காவல் போட்டுவிட்டேன்.
சபாஷ்! நமது செயல்களை அவன் மோப்பம் பிடிக்கக் கூடாது. அதுவும் குறிப் பாக இன்று இரவு வெளி யே வரக்கூடாது அவன்!
கவனித்துக்கொள்கிறேன், இரண்டு தினங்களுக்குமுன் நாம் கொண்டு வந்து சேர்த்த பிரெஞ்சு தேச விண் ஆய்வுக்கூட விஞ்ஞானி டைரக்டர் க்யூரோ, கருவி சோதனைக்குத் தயார் நிலையில் உள்ளது என்றார்.
ஆம், கருவியின் வெடிமுனை மட்டும் இணைக்கப்பட்டுவிட்டால் நம் திட்டத்திற்கு தடையேதுமில்லை!


ஜான் காதில் விழுந்த ஒரே ஒரு வார்த்தை பேராபத்து நிகழப் போவதை உணர்த்தியது...
வெடிமுனை ?


அந்த முக்கிய வேளையில் ஜானின் அதிர்ஷ்டம் கைவிட்டுவிட்டது. திடீரென முதுகில் துப்பாக்கி முனையின் அழுத்தத்தை உணர்ந்தான்
காப்டன், இங்கே பாருங்கள்!
புதிதாய் வந்த பத்திரிகை நிருபர். எப்படி வெளியே வந்தான்?


நாம் பேசியதைக் கேட்டிருப்
பான்! ஒருவேளை இவன்
பத்திரிக்கைக்காரனாய்இல்லா
திருந்தால்? உடம்பில் ரேடி
யோ கருவியினை மறைத்து
வைத்திருந்தால்...?
புரிகிறது, புரிகிறது! ஆட்க
ளின் செயல் வேகத்தை அதி
கப்படுத்தவேண்டும். இறுதிக்
கட்டத்தைப் பூர்த்தி செய்ய
இரவுமுழுக்க வேலை வைப்பது
அவசியம்.
காப்டன்! தரைப்
பலகையைத்
தகர்த்துக்
கீழிறங்கி
வந்திருக்கிறான்...
தெரியுமடா, முட்டாளே!
ஸ்லேட், முந்தையவனோடு
சேர்த்து இவனையும்
பூட்டிவை. பின்னர்
கவனிப்போம்!


கிழவனையும் கைது செய்! இனி எதிலும் ரகசியம் தேவை இல்லை!
நாளைக் காலை நம் திட்டம் நிறைவேறப் போவதால் கிழவனுக்காக நாடகம் ஆட வேண்டாம்!
காவல் போடப்பட்டிருந்த இருட்டறைக்குள் தள்ளப்பட்டான் ஜான்...
இப்போதைக்கு இரண்டு பேர்... கிழவனையும் கொண்டுவந்து சேர்த்தால் மொத்தம் மூன்று!
கிழவனைக் கொண்டுவந்து சேர்ப்பதில் சிரமமிருக்காது!


தடுமாறி கீழே விழப்போன ஜான் எதிரே அமர்ந்திருந்த உருவத்தைக் கண்டு...
பாப் மிட்செல்? நீயேதானா?
ஜான்! உளவு நிறுவனம் தான் உன்னை அனுப்பியிருக்கக்கூடும். நம் இருவர் பாடும் ஆபத்துத்தான்...


இங்கு என்னதான் நடக்கிறது பாப்?
நான் அறிந்த விஷயத்தைக் கிரகிப்பதற்காகவே இன்னும் என்னை உயிரோடு விட்டுவைத்துள்ளனர். ஸ்லேட் ஏற்கனவே இருமுறை என்னைத் துன்புறுத்திப் பார்த்தான்.


இவர்களெல்லாம் பெரும்பேராசைக்காரர்கள். நான் அறிந்தவற்றை ஒன்றொடொன்று இணைத்துப் பார்த்ததில் இவர்கள் நோக்கம் பணம் சேர்ப்பது. அதுவும் பெரும் தொகையாக! இங்கிலாந்து அரசிடம் பணயத்தொகை கேட்கப் போகின்றனர்!


ஜான், இங்கே இருப்பது விண்கலம் அல்ல. அணுகுண்டு பொருத் தபபடட ஏவுகணை. லண்டன் மாநகரை இலக்காகக் கொண்டு உள்ளது!


வீவரைக் கொண்டு ஜோஸுவாவின் நம்பிக்கையைச் சம்பாதிக்கச் செய்து இந்தத் திட்டத்திற்கு பணம் போடச் செய்துள்ளனர். ஜோஸுவாவுக்கோ அது புது உலகம் காணச் செல்லும் விண்கலம்.
விரைவில் அவருக்கும் உண்மை தெரிந்து விடும்! அவரையும பிடித்துவரப் போயிருக்கின்றனர்!


கதவின் மேல் பகுதியில் அமைந்த கம்பித்தடுப்பினூடே வெளியே நோட்டமிட்டான் ஜான்...
இவர்கள் அனுப்பவிருக்கும் அந்த பயங்கர ஏவுகணை லண்டன் நகரை வரைபடத்திலிருந்தே அழித்து விடும்.
உஷ்... பேசாதிரு! வெளியே ஏதோ சலனம்...!

# அத்தியாயம் 4. கனவின் முடிவு







காவலன் தாக்குதலை சிறிதும் எதிர்பார்க்கவில்லை...
அஹ்!
மோசக்காரர்களே.
செத்தொழியுங்கள்!


ஒல்லியான கரம் ஒன்று மெதுவாக தாழ்ப்பாளை நீக்கியது...
லேசுக்குள் எழுந்திருக்க மாட்டான்!
ஜோஸுவா! ஸ்லேட்டும் மற்றவர்களும் உங்களைப் பிடித்துவர இப்போதுதான் புறப்பட்டுச் சென்றனர்!


நான் உன்னைப் பார்க்க அறைக்கு வந்தேன். தரை பெயர்க்கப்பட்டிருந்தது பெரும் தவறு நேர்ந்திருக்கிறது என்பதை உணர்ந்தேன். ஆட்களின் காலடித் தடத்தைப் பின்பற்றி இங்கு வந்தேன்.
நிச்சயமாக பெரும் விபரீதம்தான்.
வீவர் கூட்டத்தைப்பற்றி ஜான் கூறிய உண்மையைக் கேட்டு ஜோஸுவாவின் கண்கள் கோப ஜ்வாலையை வீசின.
உன்னை நம்புகிறேன் மகனே. மிட்செல் இருப்பதும் உன் கூற்றை உறுதிப்படுத்துகிறது!
இப்போதும் ஒன்றும் தாமதமாகிவிடவில்லை. ஸ்லேட்டின் கூட்டம் உங்களைத் தேடட்டும் நாம் நிலவறைக்குச் செல்வோம்...
அதிர்ஷ்டத்தோடு இந்தத் துப்பாக்கியும் நமக்கு துணை இருக்கட்டும்.
அதிர்ஷ்டத்தை நான் நம்புவதில்லை மகனே. செயல்தான் நமது இப்போதைய தேவை...


இங்கே கதவுக்கு காவலன் இல்லை!
என்னைத் தேடிக் கண்டுபிடிக்க இவனையும் அழைத்துச் சென்றிருப்பார்கள்.


இரண்டே வல்லுநர்கள் மட்டும் அங்கே பணிபுரிந்து கொண்டிருந்தனர். வந்த மூவரும் கருவிகளை துவம்சம் செய்தபோது அவர்கள் எந்த எதிர்ப்பும் காட்டவில்லை...
அவர்கள்மேல் ஒரு கண்ணிருக்கட்டும் ஜோஸுவா!
கவலைப்படாதே மகனே. வயதுக்கேற்ப என்பார்வை மங்கிவிடவில்லை - துப்பாக்கியின் விசையைத் தொட்டிருக்கும் என் விரல்களும் பலமிழக்கவில்லை!


பத்து நிமிட நேரத்தில் கட்டுப்பாட்டு அறை சின்னாபின்னமானது...
சேதத்தை பழுதுபார்க்க பல நாட்களாகும். நாம் தீவைவிட்டு வெளியேறி உதவியுடன் இங்கே வருவோம்.
வெளி உதவி நாடும் வழி காணபிக்கிறேன் உனக்கு வா, என்னுடன்...


கடலை நோக்கியவாறு அமைந்த பெரும் சிகரம் ஒன்றின் அடிவாரத்திற்கு அவர்களை அழைத்து வந்தார்...
இங்கே எந்திரப்படகு ஒன்றினை மறைத்து வைத்துள்ளனர்.
ஏவுகணைத் தயாரிப்பிற்கான பொருட்களைக் கொண்டுவருவதற்கு இதனை அவர்கள் பயன் படுத்தியிருக்கலாம்.


வான் ஆராய்ச்சிக்கூடத்தில் களவாடியவற்றை இதன் மூலம்தான் கொண்டு வந்திருப்பர்.
அவர்களுக்கு நீர்மூழ்கிக் கப்பலும் உண்டு. அதனைக் கண்டதால்தான் நான் இத்தீவிற்கு வர நேர்ந்தது ஜான்.


மறுகணம், திடீரென துப்பாக்கி வெடியோசை எதிரொலித்தது அங்கே...
அந்தக் கபடதாரிக் கூட்டம் வந்து விட்டது - ஆ ஆ அஹ்!
குனியுங்கள்!
டுமீல்


ஸ்லேட்டின் ஆட்கள் ஒருவனிடமிருந்து வந்தது அக்குண்டு...
கிழவனைச் சுட்டு விட்டேன். மற்ற இருவரும் உயரேதான் இருக்கின்றனர்.
அவர்கள் நம்மிடமிருந்து இனி தப்பமுடியாது.


ஜோஸுவா குண்டுக் காயத்தின் வலியைப் பொறுத்தவராய்...
நான் இங்கிருந்தே அவர்களை வேட்டை ஆடுகிறேன் நீங்கள் இருவரும் கீழே ஊர்ந்து சென்று படகில் ஏறுங்கள்!
நீங்களும் எங்களுடன் வருகிறீர்கள்!


அந்த வயோதிகர் மிக உறுதியாக மறுத்தார்...
இல்லை மகனே! இந்தக் குண்டுக் காயத்திலிருந்து என்னைக் காப் பாற்ற இயலாது. மேலும் வயதான நான் மிகவும் களைப்புற்றிருக்கிறேன பயணம் செய்ய விரும்ப வில்லை.
உங்களைத் தனியே விட்டுச் செல்ல மாட்டோம்!


திடீரென குழல் துப்பாக்கியால் ஜானின் தலையில் அடித்தார் ஜோஸுவா...
ஆவ்!
என் செயலுக்கு மன்னிக்க வேண்டும். நீ ஏற்கனவே கூறியதுபோல் விவாதத்திற் கான நேரமல்ல இது.


பாப மிட்செல்லுக்கு கிழவரது பேச்சின் பொருள் புரிந்தது...
நீ தோளில் காயம்பட்டிருப்பது புரிகிறது ஆயினும் வேறு வழியில்லை. ஜானைத் தூக்கிக் கொண்டு கிளம்பு!
எப்பாடுபட்டேனும் படகில் சேர்த்து விடுவேன்.
தள்ளாடியவாறு தோள் சுமையுடன் மிட்செல் படகினை நெருங்கிய வேளையில் குன்றின் உச்சியிலிருந்து துப்பாக்கி வெடியோசை கேட்டது.
எதிரிகளை தலைதூக்க விடாது சுடுகிறார். வயதானாலும் வீரம் சிறிதும் குறையவில்லை.
ஒருவன் பாக்கியில்லாமல் ஒழித்துக் கட்டுவேன்


படகின் விசையை இயக்கினான் மிட்செல். கடலினுள் கிளம்பிய வேளையில் ஜானிற்கு நினைவு திரும்பியது...
நம்மை முன்னேற விடாது சுடுகிறானே கிழவன்!
என்ன... என்ன நடந்தது...?


ஜோஸுவாவை விட்டு வந்து விட்டாயே பாப்!
வேறு வழியில்லை ஜான். கிழவர் கொஞ்சமும் மசியக்கூடியவராக இல்லை!


குன்றின் உயரே படுத்திருந்த ஜோஸுவா மற்றுமொருமுறை துப்பாக்கியினை வெடிததார். கீழே படகு புறபபட்டுச் செல்லும் ஓசை கேட்டது...
அவர்கள் தப்பி விட்டனர். இனி ஆபத்தில்லை அவர்களுக்கு என் துப்பாக்கியில் இருபபதோ ஒரே ஒரு குண்டுதான!


மலை அடிவாரத்தை அடைய உருண்டார் ஜோஸுவா...
எஞ்சிய ஒருகுண்டு போதும் எனக்கு... இளைஞர்களும் தப்பிவிட்டனர்!


உருண்டு சமதளத்தை அடைந்த ஜோஸுவாவினால் மேலே குகை வாயிலைக் காணமுடிந்தது. கடைசி முறையாக துப்பாக்கி வெடித்தது.. ஆனால் அதன் இப்போதைய இலக்கோ வித்தியாசமானது.
டுமீல்!
ஸலேட், வீவர் மற்றும் அவர்களது கொலை வெறிக்கும்பலுக்கு இந்த இடம் தெரியாது- இனியும் தெரியப் போவதில்லை!


கடைசிக் குண்டு வெடிமருந்துக் குவியலில் பாய...
என்ன பயங்கரம்!
டமால்
ஜோஸுவா முன்பு வாக்களித்தபடி நடத்திக் காட்டிவிட்டார் தீவை விட்டுப் போகும்போது வேறாள் வரும் உட்புகுந்து பாழ்படுத்தி விடாதபடி அழித்துவிடுவேன் எனக் கூறினார்- அதைத்தான் இப்போது செய்திருக்கிறார்.


இடிமுழக்கமென வெடித்துச் சிதறிய பாறைகள் கடலில் வந்து விழுந்தன...
ஜோஸுவா காயம்படாதிருந்தாலும்கூட தன் தீவைவிட்டு வரச் சம்மதித்திருக்க மாட்டார்!
உண்மையை உணர்ந்தபின் மேலும் உயிர் வாழ எந்த ஒரு காரணமுமில்லை அவருக்கு!
புதுஉலகம் காணச் செல்கிறோம் என்ற ஆசையில்தான் அவர் இதுவரைஉயிர் வாழ்ந்து கொண்டிருந்தார். ஆனால் இறுதியாக, தன் மரணம்தான் அந்தக் கனவு உலகம் என்பது புரிந்துவிட்டது அவருக்கு!


இரண்டு தினங்களுக்குப்பின் இருவரும்
பாரீஸ் வந்தடைந்தனர். ஜான் லண்டன்
புறப்படத் தயாரானான்...
குட்பை, ஜான்!
என்னைத் தேடிக
கண்டுபிடிக்க வந்த
தற்கு நன்றி!
உன்னைக் கண்டுபிடிப்பதற்
காக மட்டும் உளவுநிறுவனம்
என்னை அனுப்பவில்லை என்ப
தை நானறிவேன். கடைசி
வரை அவர்கள் உண்மையான
காரணத்தைக் கூறவேயில்லை


காத்திருக்கும் லண்டன் விமானத்தை
நோக்கி ஜான் செல்வதைப் பார்த்த
வாறிருந்தார் உளவு நிறுவனத்தின்
தலைவர்...
திரும்பவும் ஜான் தன்
திறமையை வெளிப்
படுத்திவிட்டான்,
ஸார்! மிட்செல்லை
காப்பாற்ற மட்டுமே
அனுப்புவதாகக்கூறி
அவனை ஏமாற்றிவிட்
டோம் என்பதைப்
புரிந்துகொண்டேன்.




தி மேத்தா பப்ளிகேஷன் நிறுவனத்திற்காக அச்சிட்டு வெளியிடுபவர்
R. அசோக் மேத்தா. முகவரி : 18, நேரு ரோடு, சிவகாசி-626 123,
பதிப்பாசிரியர்: முல்லை தங்கராசன். வெளியீடு.5. செப்டம்பர்-1984


விற்பனையாகின்றன!
மேத்தா காமிக்ஸ்
இரத்த விளையாட்டு
கொலைக் கழகம்
மனித வேட்டை
மரணக்கயிறு
நான்கு புத்தகங்களுக்கும் ரூ. 6-00
அனுப்பினால் தபால்செலவு இலவசம்!
தனிப்பிரதி வேண்டுவோர் ரூ.1.70 அனுப்பவும்.
தி மேத்தா பப்ளிகேஷன் அண்ணாசாலை,
சிவகாசி-626123.


அடுத்த வெளியீடு!
மேத்தா காமிக்ஸ்
விசித்திரப் பந்தயம்
ரூ 1-50
தி மேத்தா பப்ளிகேஷன்,
அண்ணாசாலை, சிவகாசி_626123.